செ.வெ.எண். 41/அக்டோபர் நாள் : 22.10.2019

**தருமபுரி மாவட்டத்திலுள்ள மருந்து கடை உரிமையாளர்கள், மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வாளர்கள் மற்றும் மருந்தாளுநர்களுக்கான டெங்கு விழிப்புணர்வு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி., இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தருமபுரி மாவட்டத்திலுள்ள மருந்து கடை உரிமையாளர்கள், மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வாளர்கள் மற்றும் மருந்தாளுநர்களுக்கான டெங்கு விழிப்புணர்வு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி., இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி., இ.ஆ.ப. அவர்கள் பேசியதாவது.

வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் பொதுமக்களுக்கு காய்ச்சல் ஏற்படுகிறது. மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் ஏடிஎஸ் டெங்கு கொசு புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து, அவற்றை அழித்து சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தவேண்டும். மருந்து கடை உரிமையாளர்கள் காய்ச்சல் என்று வரும் பொதுமக்களுக்கு மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் எந்த மருந்துகளையும் விநியோகிக்கக்கூடாது. அப்படி மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாமல் மருந்து விநியோகிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தங்கள் பகுதியில் உள்ள போலி மருத்துவர்களின் விவரங்களை 1077 என்ற மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டு அறைக்கு தெரியப்படுத்தவேண்டும். தகவல் அளிப்பவர்கள் குறித்த விவரம் ரகசியமாக வைக்கப்படும். ஒவ்வொரு வாரத்தின் வியாழக்கிழமையம் தூய்மை தினமாக கடைபிடித்து, தங்கள் பகுதியை தூய்மைப்படுத்த வேண்டும். மாவட்டத்தை 6 மண்டலமாக பிரித்து தூய்மையாக பராமரித்து வருகிறது. காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தவேண்டும். அனைத்து மருந்து கடைகளிலும் (ORS) உப்பு சர்க்கரை கரைசல் மற்றும் பிளீச்சிங் பவுடர் போதிய அளவு இருப்பு வைத்துக்கொள்ளவேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மேலும் அனைத்து வீடுகளிலும் பயன்படுத்தும் ஏ.சி., பிரிட்ஜ், இதர குளிர்சாதனப்பெட்டி, கிரைண்டர், மிக்சி, வாஷிங்மெசின் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை தண்ணீர் தேங்கிடாத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். அரசு

மற்றும் தனியார் கட்டடங்கள், ஆர்கானிக் பார்ம் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் தேங்கிடாதவாறு உடனடியாக அகற்றிடவும் அறிவுரைகள் வழங்கினார்.

தருமபுரி அரசு மருத்துவமனையில் காய்ச்சல் சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது. எனவே காய்ச்சல் ஏற்பட்டால் பொதுமக்கள் அரசு மருத்துவமனையை அணுகி தரமான சிகிச்சை பெறவேண்டும். டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணியில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் முழுமையாக டெங்கு கொசுக்களை ஒழிக்க முடியும் என பேசினார்.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.ஜெகதீஸ்குமார், தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் திரு.சீனிவாசராஜ், அரூர் சரகம் மருந்துகள் ஆய்வாளர் திருமதி.அ.சந்திராமேரி, தருமபுரி சரகம் மருந்து ஆய்வாளர்(பொறுப்பு) திரு.டி.ராஜீவ்காந்தி, மருந்து கடை உரிமையாளர்கள், மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வாளர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**